# தினப்புயல்

PTN news

THINAPPUYAL

තිනප්පූයල්

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06


## இஸ்ரேல் பொஸ்பரஸ் குண்டு தாக்குதல்



தடை செய்யப்பட்ட வெண் பொஸ்பரஸ் குண்டுகளை இஸ்ரேல் பயன்படுத்துவதாக பலஸ்தீனியர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். இஸ் ரேலுக்குள் புகுந்து திடீர் தாக்குதல் நிகழ்த்திய ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராக இஸ்ரேல் போர் பிரகடனம் செய்துள்ளது.

இந்நிலையில், காஸா பகுதியை குறிவைத்து இஸ்ரேல் மேற்கொள்ளும் தாக்குதலால், அப்பாவி பொதுமக்கள் கொல்லப்படுவதாக ஹமாஸ் அமைப்பு குற்றம்சாட்டியது.மேலும்,தடைசெய்யப்பட்ட வெண் பொஸ்பரஸ் குண்டுகளை இஸ்ரேல் பயன்படுத்துவதாக பலஸ்தீனிய தரப்புக்கள் தெரிவித்துள்ளன. காஸா பிராந்தியத்தில் பதுங்கியிருக்கும் ஹமாஸ் அமைப்பினர் மீது தாக்குதல் தொடுப்பதாகவே இஸ்ரேல் அறிவித்தது.

எனினும் வடக்கு காஸா உட்பட மக்கள் குடியிருப்புகளை குறிவைத்து இஸ்ரேல் தாக்குவதாக பலஸ்தீனியர்களின் முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது. வெண் பொஸ்பரஸ் குண்டுகள் என்பவை பெரும் நெருப்புக் கோளமாக வெடிப்பவை. சுமார் ஆயிரம் டிகிரி செல்சியஸ் வரை வெப்பத்தையும், நெருப்பையும் உமிழ்பவை. ஆழ்ந்த தீக்காயங்களுடன் மனிதர்களை நடைபிணமாக முடக்கக்கூடியவை. இவற்றை போரில் பயன்படுத்த சர்வதேச நாடுகள் மத்தியில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தடையை மீறி வெண் பொஸ்பரஸ் குண்டுகளை பயன்படுத்துவது போர்க்குற்றமாக கருதப்படும். இதற்கு முன்னதாகவும் லெபனான் உள்ளிட்ட நாடுகளின் மீது வெண் பொஸ்பரஸ் குண்டுகளை இஸ்ரேல் பயன்படுத்தியதான முறைப்பாடுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. எனினும் அதன்போது மறுப்பு தெரிவித்த இஸ்ரேல், சர்வதேச அழுத்தம் காரணமாக பின்னர் அவற்றை ஒப்புக்கொண்டது. அதேபோன்று இப்போதும் இஸ்ரேல் வெண் பொஸ்பரஸ் குண்டுகளை பயன்படுத்துமெனில், போர் குற்றம் உள்ளிட்ட கூடுதல் பிரச்சினைகளுக்கும் உள்ளாகக்கூடும் என கூறப்படுகிறது.

## கல்முனை மாநகர சபையினால் நூராணியா மையவாடி சிரமதானம்



கல்முனை மாநகர சபையின் சேவை விநியோக மேம்பாடு திட்டத்தின் கீழ் கல்முனை நூராணியா மையவாடியை சிரமதானம் மூலம் துப்பரவு செய்யும் வேலைத் திட்டம் செவ்வாய்க்கிழமை (10) மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி அவர்கள் தலைமையில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது இம்மையவாடியானது மாநகர சபை ஊழியர்களினால் முழுமையாக துப்பரவு செய்யப்பட்டு, கழிவுகள் யாவும் திண்மக் கழிவகற்றல் வாகனங்கள் மூலம் அகற்றப்பட்டுள்ளன.

மாநகர சபையின் தொழில் நுட்ப உத்தியோகத்தர்களான எம்.அமீர், எம்.எம்.நிஸார் மற்றும் மேற்பார்வையாளர்கள் சிரமதானப் பணிகளை நெறிப்படுத்தியிருந்தனர்.

கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி அவர்களின் விஷேட ஆலோசனை, வழிகாட்டலில் நடைமுறைப்படுத்தப்படும் இவ்வேலைத் திட்டம் கல்முனை தமிழ் பிரிவு இந்து மயானத்தில் சில தினங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இன்று புதன்கிழமை மருதமுனை அக்பர் மையவாடியிலும் நாளை வியாழக்கிழமை சாய்ந்தமருது தக்வா மையவாடியிலும் அதனைத் தொடர்ந்து நற்பிட்டிமுனை போன்ற பகுதிகளிலும் இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. **(பாறுக் ஷிஹான்)**

## இலங்கையை வீழ்த்தியது பாகிஸ்தான்



2023 உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று இடம்பெற்ற போட்டியில் இலங்கை அணியை 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணி வீழ்த்தி வெற்றி பெற்றுள்ளது. ஹைதராபாத் மைதானத்தில் நேற்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமான இந்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 344 ஓட்டங்களை பெற்றது. இலங்கை அணி சார்பில் குசல் மெந்திஸ் 122 ஓட்டங்களையும், சதீர சமரவிக்ரம 108 ஓட்டங்களையும், பெத்தும் நிஸ்ஸங்க 51ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பாகிஸ்தான் அணி சார்பில் ஹசன் ஹலி 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதற்கமைய 345 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 48.2 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. பாகிஸ்தான் அணி சார்பில் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய மொஹமட் ரிஷ்வான் ஆட்டமிழக்காது 131 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். அப்துல்லா ஷபீக் 113 ஓட்டங்களையும், சவுத் ஷகீல் 31 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் டில்ஷான் மதுசங்க அதிகபட்சமாக இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

## புதிய லொத்தர் சீட்டுக்கள் சந்தைக்கு அறிமுகம்

தேசிய லொத்தர் சபையின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, புதிய லொத்தர் சீட்டுகளான "மெகா மில்லியனர்ஸ்" மற்றும் "மெகா 60" சந்தைக்கு அறிமுகம் செய்யப்பட்டது.

அத்துடன் வெற்றியாளர்களுக்கான காசோலைகளும் வழங்கப்பட்டன.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (10) ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

கொவிசெத்த 3471 மற்றும் 3477 சீட்டிழுப்புகளின் போது வெற்றியாளர்களாக தெரிவாக அதுருகிரிய எம்.ஏ.ரசாஞ்சலி பெரோரா (ரூ. 61,271,108.00) மற்றும் மத்துகம கே.சமிந்த ஜெயவிக்ரம (ரூ. 60,503,772.80) ஆகியோருக்கு காசோலை வழங்கப்பட்டது.

தேசிய லொத்தர் சபையின் தலைவர் கலாநிதி சமீர சி.யாப்பா அபேவர்தன, பணிப்பாளர் கலாநிதி கித்சிறி மஞ்சநாயக்க மற்றும் பொது முகாமையாளர் சட்டத்தரணி ஹஷினி ஜயசேகர மற்றும் அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.



## கிழக்கு மாகாணத்திற்கான முன்னேற்ற மீளாய்வு தொடர்பான கலந்துரையாடல்



தொழில் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சின் கிழக்கு மாகாணத்திற்கான முன்னேற்ற மீளாய்வு குறித்த கலந்துரையாடல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் ஜகத் புஷ்பகுமார தலைமையில் மண்முனை வடக்கு பிரதேச செயலக டேபா மண்டபத்தில் நேற்று (10) இடம் பெற்றது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்திட்டங்கள் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஸ்ரீகாந்த் மற்றும் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜேகதீசன் ஆகியோர் தெளிவுபடுத்தினர்.

இங்கு கருத்து தெரிவித்த மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஸ்ரீகாந்த், இரண்டு வயதுடைய குழந்தைகளின் தாய்மார்கள் வெளிநாடுகளுக்கு தொழில் தேடி செல்வதனால், அவர்களுக்கான பராமரிப்பு பாதிக்கப்படுவதாகவும், பிள்ளைகளின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு வயதெல்லையை தீர்மானிக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

இதன்போதுமாவட்ட,பிரதேசமட்டங்களில்நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அமைச்சின் செயற்திட்டங்களில் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான இம்மீளாய்வுக் கலந்துரையாடலில் பங்கேற்ற இராஜாங்க அமைச்சர் தலைமையிலான அதிகாரிகள், திட்டங்களை அமுல்படுத்துவதில் காணப்படும் சிக்கல்கள், உத்தியோகத்தர்கள் எதிர் நோக்கும் சவால்கள் என்பன தொடர்பாகக் கலந்தாலோசித்தனர். இந் நிகழ்வில் அமைச்சின் செயலாளர் ஆர்.வி.விமலவீர, உதவி மாவட்ட செயலாளர் ஆ.நவேஸ்வரன், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன், அமைச்சின் பணிப்பாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

## ஆப்கானிஸ்தானில் மீண்டும் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

ஆப்கானிஸ்தானில் கடந்த (07) சனிக்கிழமை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் சுமார் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இதில் பெரும்பாலானோர் பெண்கள், குழந்தைகள் ஆவார்கள். மீட்புப்பணி இன்னும் முழுமையாக முடிவடையவில்லை.

இந்தநிலையில் இன்று(11)மீண்டும்சக்கி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிக்டர் அளவில் 6.1 ஆக பதிவாகியுள்ளது.

உள்ளூர் நேரப்படி இன்று (11) காலை 6.11 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த தகவலை அந்நாட்டு நில அதிர்வுக்கான தேசிய மையம் தெரிவித்துள்ளது. இன்றைய நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் குறித்த தகவல் உடனடியாக வெளியாகவில்லை.




## கன்னி சதத்தை பதிவு செய்தார் சதீர சமரவிக்ரம




பாகிஸ்தானுக்கு எதிராக முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்காக சதீர சமரவிக்ரம சதம் அடித்தார்.

82 பந்துகளில் 2 சிக்ஸர்கள் மற்றும் 10 பவுண்டரிகள் அடங்களாக இந்த சதத்தை பெற்றார்.

சதீர சமரவிக்ரமவின் ஒருநாள் கிரிக்கெட் வாழ்க்கையில் இதுவே முதல் சதமாகும்.

## இலங்கை படகை கைவிட்டு தப்பி ஓடிய இரண்டு நபர்கள்



ராமநாதபுரம் மண்டபம் அருகே முனைக்காடு கடற்கரை பகுதியில் நேற்று (10) சந்தேகத்துக்கிடமாக இலங்கை கண்ணாடியிலை படகை கைவிட்ட நிலையில் மர்ம நபர்கள் இருவர் தப்பி ஓடியதாக அப்பகுதியில் உள்ள மீனவர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இதையடுத்து அப்பகுதிக்கு சென்று பொலிஸார் இலங்கை படகை மீட்டு கடத்தல்காரர்கள் யாரேனும் வந்தார்களா? அல்லது சமூக விரோதிகள் யாரேனும் வந்தார்களா என்ற கோணத்தில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் படகில் இருந்து 2 பேர் அதி வேகமாக தப்பித்து சென்றதாக அப்பகுதியில் உள்ள மீனவர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர். படகு மற்றும் வெளி இணைப்பு இயந்திரம் ஆகியவற்றை கைவிட்டு மர்ம நபர்கள் தப்பி சென்ற பகுதி தங்கம், கஞ்சா உள்ளிட்ட கடத்தல் நடைபெறும் பகுதியாக உள்ளதால் வந்தவர்கள் கடத்தல்காரர்களாக இருக்கக்கூடும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இன்று மோதும் இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தான்




உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் Rohit Sharma தலைமையிலான இந்திய அணி, Hashmatullah Shahidi தலைமையிலான ஆப்கானிஸ்தான் அணியை எதிர்த்து இன்று (11) மோதவுள்ளது. இந்த போட்டி டெல்லி மைதானத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

உலக் கிண்ண முதலாவது போட்டியில் பங்களாதேஷிடம் ஆப்கானிஸ்தான் போராடி தோற்றது. இதனை அடுத்து இந்த போட்டியில் வெற்றி பெறும் நோக்குடன் களமிறங்குகிறது ஆப்கானிஸ்தான் அணி. அத்துடன் இந்திய அணி அவுஸ்திரேலியா அணியுடனான தனது முதலாவது வெற்றியினை தொடர்ந்து இன்று ஆப்கானிஸ்தானுடன் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தென்னாபிரிக்க வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதியுடன் சந்திப்பு



இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் (IORA) கூட்டத்தில் பங்கேற்க நாட்டிற்கு வருகை தந்திருக்கும் ஐக்கிய ராஜ்ஜியத்தின் இந்து - பசுபிக் அலுவல்கள் தொடர்பான இராஜாங்க அமைச்சர் ஏன் மெரி டெவிலியன் (Anne-Marie Trevelyan) மற்றும் தென்னாபிரிக்க வெளிவிவகார அமைச்சர் கலாநிதி நலேட் பெண்டோர் (Dr.Naledi Pandor) ஆகியோர் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (10) ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடினர்.

இதன் போது முதலாவதாக இடம்பெற்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் ஐக்கிய ராஜ்ஜியத்தின் இந்து - பசுபிக் அலுவல்கள் தொடர்பான இராஜாங்க அமைச்சர் ஏன் - மெரி டெவிலியன் (Anne-Marie Trevelyan) ஆகியோருக்கிடையிலான சந்திப்பில் பொருளாதார மீட்சி உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது. உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பிலான சட்டமூலம், நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டமூலம் மற்றும் புதிய பயங்கரவாத தடுப்புச் சட்டமூலம் உள்ளிட்ட சட்டவாக்க செயற்பாடுகளில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.

இலங்கையில் தனியார் பல்கலைக்கழங்களை நிறுவுவதற்கான திட்டம் தொடர்பில் இராஜாங்க அமைச்சருக்கு தெளிவூட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஐக்கிய ராஜ்ஜியத்தின் பல்கலைக்கழகங்களும் இதனோடு இணைந்துகொள்ளுமென எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். அதனையடுத்து தென்னாபிரிக்க வெளிவிவகார அமைச்சர் கலாநிதி நலேட் பெண்டோர் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு இடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் மேம்பாட்டிற்கு தென்னாபிரிக்கா வழங்கிய ஒத்துழைப்புக்கு ஜனாதிபதி அமைச்சரிடத்தில் நன்றி தெரிவித்தார். அது தொடர்பிலான சட்டத்தை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்பிக்கவிருப்பதாகவும் வருட இறுதிக்குள் அதனை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார். இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கமான (IORA) வின் தலைமைத்துவத்தை வகிக்கும் காலப்பகுதியில் இந்து சமுத்திரத்தின் தனித்துவத்தை வலுப்படுத்துவதே இலங்கை நோக்கமாகும் என்றும் சுட்டிக்காட்டினார். வருடாந்தம் இரு தடவைகள் உறுப்பு நாடுகளின் தலைவர்களின் கூட்டமொன்றை நடத்த வேண்டுமெனவும், இந்து சமுத்திரம் தனித்துவமான அரசியல் அடையாளத்தை கொண்டுள்ளதாகவும் ஜனாதிபதி இங்கு மேலும் சுட்டிக்காட்டினார்.